NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 28 July 2017

# இளைய, வயதான குற்றவாளிகள் மறுவாழ்வில் அக்கறை தேவை

மறுவாழ்வு உதவி இளைஞர்களைக் காட்டிலும் முதியவர்களுக்கு தற்பொழுது தேவைப்படுகிறது என்று நேற்று நடைபெற்ற குற்றவாளிகளின் மறுவாழ்விற்கான புத்தாக்க அணுகுமுறைகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக சமூகசேவை ஆய்வு மையத்தின் பேராசிரியர் திரு பால் சியுங் "2010ஆம் ஆண்டு 243 ஆக இருந்த அறுபது வயதைத் தாண்டிய குற்றவாளிகளின் எண்ணிக்கை சென்ற ஆண்டு 650ஆக உயர்ந்துள்ளது. சிறைக் கைதிகளின் மொத்த எண்ணிக்கையில் 5.4 விழுக்காட்டினர் முதியவர்கள்," என சுட்டிக்கட்டினார்.

"முதியவர்களுக்குக் கடும் தண்டனை, நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கப்படுவதால் குற்றங்கள் குறைந்து அவர்களின் மறுவாழ்விற்கு அது வழிவகுக்குமா?" என பேராசிரியர் சியுங் கேள்வி எழுப்பினார்.

"ஏழ்மை, தனிமை, சமூக ஆதரவுக் குறைபாடு காரணமாக முதியோர் குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்ற ஜப்பான் நாட்டின்ஆய்வு அறிக்கையை சிங்கப்பூர் உற்று நோக்கவேண்டும்," எனக் கூறிய பேராசிரியர் சியுங், "வயதான குற்றவாளிகளின் புணர்வாழ்விற்கு சமூக ஆதரவு முக்கியமாகத் தேவைப்படுகிறது," என்றும் கூறினார்.

மாநாட்டின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இரண்டாம் உள்துறை அமைச்சர் திரு டெஸ்மண்ட் லீ, மறுவாழ்வு பணிகள் படிப்படியாக முன்னரே அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயத்தைச் சுட்டிக்காட்டினார். மேலும் குற்றவாளிகள் தண்டனை காலம் முடிந்து சமூகத்தில் மீண்டும் நுழையும்போது குடும்பத்தின் ஆதரவு, வருமானம் ஈட்ட வழிகள், சமூக நிலைத்தன்மை, சமூகத்தில் அவர்களுக்கான மரியாதை போன்றவற்றை பலப்படுத்தத் தேவையான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.